FMM SRI LANKA
නිදහස් මාධ්‍ය ව්‍යාපාරය
சுதந்திர ஊடக இயக்கம்
Free Media Movement

# මාධ්‍ය නිදහස: නිරීක්ෂණ වාර්තාව
# ஊடக சுதந்திரம்: கண்காணிப்பு அறிக்கை
# Media Freedom Rights Monitoring Report

MFRMD

## 2022 ஜூன்

Vol. 02 - தொகுதி 06


ஊடகவியலாளர் தரிந்து உடுவரகெதர குற்றவியல் விசாரணைத் திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டமை.


பேராசிரியர் நெதலகமுவ தம்மதின்ன தேரர் கைது செய்யப்பட்டமை.


ஊடகவியலாளர் சண்முகம் தவசீலன் தாக்கப்பட்டமை.

ஊடக சுதந்திரம் குறித்து ஜூன் மாதத்தில் நடைபெற்ற சம்பவங்கள் மற்றும் முந்தைய சம்பவங்களின் பின்தொடர்வுகள் தொடர்பில் சுருக்கமான முறையில் கண்காணித்து இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். ஊடகவியலாளர்கள் மற்றும் பொதுமக்களின் கருத்துச் சுதந்திரம் மற்றும் பேச்சுச் சுதந்திரம் தொடர்பான நிகழ்வுகள் மற்றும் புதிய சட்ட உருவாக்கம், சட்டச் சீர்திருத்தங்கள் மற்றும் அது தொடர்பான முன்மொழிவுகளுக்கான தேசிய மற்றும் சர்வதேச கருத்துகள் போன்றவற்றிலும் இந்த அறிக்கை கவனம் செலுத்துகிறது. ஊடக சுதந்திரம் மற்றும் ஊடக உரிமைகள் தொடர்பில் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகச் சுதந்திர ஊடக இயக்கம் தேர்ந்தெடுத்துள்ள பகுதிகூறுகள் மற்றும் நோக்கங்களுக்கு அமைய 29 நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள் ஜூன் 2022 அறிக்கையில் உள்வாங்கபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இவற்றில் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் தொடர்பான 7 சம்பவங்கள், சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள் தொடர்பான 20 சம்பவங்கள், ஊடக சுயாதீனத்துவம் தொடர்பான 01 சம்பவம் மற்றும் கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள் தொடர்பான 01 சம்பவம் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன. பெரும்பாலான சம்பவங்கள், ஜனாதிபதியை இராஜினாமா செய்ய நிர்பந்திக்கும் வகையில் நாடு முழுவதும் ஏற்பட்ட மக்கள் எழுச்சியுடன் தொடர்புடையவை ஆகும்.

## ஜூன் மாதத்தில் கண்காணிக்கப்பட்ட சம்பவங்கள்:

1. கோத்தகோகம போராட்டக்காரர்களை வெளியேற்றுவதை தடுக்கக் கோரிய மனு நிராகரிக்கப்பட்டமை.
2. ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களை மீண்டும் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமை.
3. வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொட, சர்வதேச ஊடகவியலாளர் சம்மேளனத்தின் 31ஆவது மாநாட்டில் உரையாற்றியமை.
4. அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் பேரணிக்கு எதிராகத் தடை உத்தரவு பிறப்பிக்க நீதிமன்றம் மறுத்தமை.
5. கோத்தகோகம ஆர்ப்பாட்டத்தின் மீதான தாக்குதல் தொடர்பில் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு மனித உரிமைகள் ஆணைக்குழு விடுத்திருந்த அழைப்பு இரத்து செய்யப்பட்டமை.
6. கோத்தாகோகம போராட்ட களத்தில் நடத்தப்பட்ட தாக்குதலுக்குக் காரணமான அரசியல்வாதிகளிடம் இருந்து நஷ்டஈடு வழங்குமாறு கோரி உச்ச நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனுமீதான விசாரணை ஆரம்பிக்கப்பட்டமை.

7. மே 9 தாக்குதல் தொடர்பான விசாரணைகள் குறித்து தமது அதிருப்தியை தெரிவித்து சட்டத்தரணிகள் சங்கம் சட்டமா அதிபருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியமை.

8. மக்கள்போராட்டத்தின்செயற்பாட்டாளர்கள்கைதுசெய்யப்பட்டமை தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டமை.

9. மக்கள் போராட்டத்தின் செயற்பாட்டாளரான சட்டத்தரணி சேனக பெரேரா குற்றவியல் விசாரணை திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டமை.

10. சமூக ஊடக செயற்பாட்டாளர் சம்பத் எதிரிசிங்க கந்தளாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டமை.

11. குருநாகலை சேர்ந்த சமூக ஆர்வலர்கள் இருவரிடம் விசாரணை மேற்கொண்டதுடன் அதில் ஒருவரை கைது செய்தமை.

12. "கோத்தாகோகம" போராட்டத்தின் செயற்பாட்டாளரான கன்னிகாசிரீ மேரி சொனாலி, வாக்குமூலம் அளிப்பதற்காக வென்னப்புவ காவல் நிலையத்திற்கு அழைக்கப்பட்டமை.

13. மாத்தறை நீதவான் நீதிமன்றம் போராட்டக்காரர் ஒருவருக்கு மூன்றரை வருட கால சிறைத்தண்டனை விதித்தமை.

14. முல்லைத்தீவில் இடம்பெற்ற மக்கள் போராட்டத்தை அறிக்கையிடச் சென்ற ஊடகவியலாளர் கணபதிப்பிள்ளை குமணன் என்பவரைக் கடற்படை அதிகாரிகள் இடையூறு விளைவித்தமை.

15. போராட்டத்தில் ஈடுபட்ட தொழிற்சங்க செயற்பாட்டாளர்கள் சிலரை நீதிமன்ற விசாரணைக்காக அழைத்தமை.

16. காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் காயமடைந்த பீ.எஸ் அனுரங்க மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடொன்றை சமர்பித்தமை.

17. நெருக்கடி தொடர்பான விரிவான கருத்தாடல் என்ற தொனிப்பொருளில் ஹாஷ்டாக் தலைமுறை அமைப்பு இணையவழி கலந்துரையாடல் ஒன்றை ஏற்பாடு செய்தமை.

18. மல்லாவி பிரதேசத்தில் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில் செய்தி அறிக்கையிட்டுக்கொண்டிருந்த ஊடகவியலாளர் சண்முகம் தவசீலன் இனம்தெரியாத சில நபர்களால் தாக்கப்பட்டமை.

19. சமூக ஊடக செயற்பாட்டாளர் அனுருத்த பண்டார காலிமுகத்திடல் போராட்டக்களத்தில் கைது செய்யப்பட்டமை.

20. மக்கள் போராட்டத்தின் செயற்பாட்டாளரான அமல் சாலிந்த கைது செய்யப்பட்டமை.

21. ஜனாதிபதி செயலகத்திற்கு அருகில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 21 போராட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டமை.

22. ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவை கைது செய்யவதை தடை விதிக்குமாறு கோரிய மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்துள்ளமை.

23. கோட்டை நீதவான் பிறப்பித்த உத்தரவின் பிரகாரம் மருதானை காவல் நிலையத்தில் முன்னிலையான மக்கள் போராட்டத்தின் செயற்பாட்டாளர்கள் 7 பேர் நீதிமன்றில் ஆஜர்படுத்தியமை.

24. மக்கள் போராட்டத்தின் செயற்பாட்டாளரான யொஹான் செனவிரத்ன தம்புள்ளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டமை.

25. நாடாளுமன்றத்தின் அரசாங்க பொறுப்பு முயற்சிகள்பற்றிய குழு (COPE) வின் செயல்பாடுகளைச் அறிக்கையிடுவதற்கு ஊடகங்களுக்கு வாய்ப்பு மறுக்கப்பட்டமை.

26. ஊடகவியலாளர் தரிந்து உடுவரகெதர விமானப்படை புலனாய்வு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் குற்றவியல் விசாரணைத் திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டமை.

27. அரசாங்கத்திற்கு எதிரான மக்கள் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்த பேராசிரியர் நெதலகமுவே தம்மதின்ன தேரர் கைது செய்யப்பட்டமை.

28. காலி கோட்டை உயர் சுவரில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தை இராணுவத்தினர் இடைமறித்தமை.

29. சிவில் பிரஜைகள் போராட்ட இயக்கத்தின் இணை அழைப்பாளர் ரவீந்திர ஜாகொடவை பொத்தல காவல் நிலையத்திற்கு அழைத்து வாக்குமூலம் பெற்றுக்கொள்ளப்பட்டமை.

**அட்டவணை எண்: 01 அறிக்கையிடப்பட்ட மொத்த சம்பவங்களின் எண்ணிக்கை – 2022 ஜூன் மாதம்**

| உள்ளடக்கப்பட்டுள்ள ஆக்கக் கூறுகள் | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் | 07 |
| சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுபாடுகள் | 20 |
| தொழில்சார் நிபுணத்துவம் | 01 |
| கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள் | 01 |
| **மொத்தம்** | **29** |

## ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம்

**ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் எனப்படுவது ஊடகவியலாளர்கள் தங்களது தொழிலை உடல்சார் மற்றும் மனரீதியாக ஒர்முகப்படுத்தி சுயாதீனமாகத் தமது ஊடக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான சுதந்திர மற்றும் சுயாதீன சூழல் ஆகும். இது ஊடக சுதந்திரத்தின் அடிப்படை காரணியாகவும் காணப்படுகின்றது. அதே சமயம், ஊடகச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் ஆகியவற்றைப் பாதுகாக்க வேண்டுமாயின், குடிமக்கள் ஊடகங்களில் அல்லது வேறு வழிகளில் எதிர்விளைவுகளை எதிர்கொள்ளாமல் அல்லது தனது பாதுகாப்பிற்கு எவ்வித பாதிப்புக்களையும் எதிர்கொள்ளாமல் சுதந்திரமாகத் தனது கருத்தை வெளிப்படுத்தும் சூழல் உருவாக வேண்டும். கருத்துச் சுதந்திரம் என்பது அமைதியான முறையில் ஒன்றுகூடல், அமைதியான முறையில் போராட்டம் மேற்கொள்ளல் மற்றும் எதிர்ப்பு தெரிவித்தல் போன்ற உரிமைகளை உள்ளடக்கியதாகும். இவ்வடிப்படை உரிமைகள் மீறப்பட்ட 07 சம்பவங்கள் ஜூன் மாதத்தில் அறிக்கையிடப்பட்டன.**

**அட்டவணை 2: 2022 ஜூன் மாதம் : ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் – சம்பவங்கள் 07**

| குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| தாக்குதல் | 01 |
| உளவியல் ரீதியான துஷ்பிரயோகம் | 06 |
| **மொத்தம்** | **07** |

1. **மக்கள் போராட்டத்தின் செயற்பாட்டாளரான சட்டத்தரணி சேனக பெரேரா குற்றவியல் விசாரணை திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டமை.**

அழைப்பிற்கான தெளிவான காரணங்கள் எதுவும் குறிப்பிடாமல் இந்த அழைப்பு விடுக்கப்பட்டதுடன், மே 25ஆம் திகதி கோட்டை நீதவான் நீதிமன்றத்திற்கு முன்பாக ஒன்றுகூடிய ஆர்ப்பாட்டக்காரர்கள் சட்டவிரோத நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்ட ஒலி நாடா தொடர்பில் அவரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது பொய்யான குற்றச்சாட்டு எனச் சட்டத்தரணி சேனக பெரேரா அங்குத் தெரிவித்துள்ளார்.

இந்த அழைப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து ஜூன் 6 ஆம் திகதி குற்றவியல் விசாரணைத் திணைக்களத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றும் நடத்தப்பட்டது.

ஆதாரம்: www.youtube.com

2. **"கோத்தாகோகம" போராட்டத்தின் செயற்பாட்டாளரான கன்னிகாசிரீ மேரி சொனாலி, வாக்குமூலம் அளிப்பதற்காக வென்னப்புவ காவல் நிலையத்திற்கு அழைக்கப்பட்டமை.**

"அரசியல்வாதி ஒருவரின் வீடு மற்றும் சொத்துக்களை எரித்த சம்பவம்" தொடர்பான விசாரணைகுறித்து வாக்குமூலமொன்றை பெறுவதற்காக, முன்னாள் பாடசாலை அதிபரான கன்னியாஸ்திரி மேரி சொனாலி, ஜூன் 7ஆம் திகதி வென்னப்புவ காவல்துறை நிலையத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார். இதுகுறித்து கத்தோலிக்க மக்கள் அமைப்புக்களின் கூட்டணி செய்தியாளர் சந்திப்பொன்றை நடாத்தி இது தொடர்பில் கடும் எதிர்ப்பைத் தெரிவித்ததையடுத்து, அந்த விசாரணைக்கான அழைப்பை வாபஸ் பெற காவல்துறையினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

ஆதாரம்: FMM Media Rights Monitoring Desk

www.themorning.lk

3. **முல்லைத்தீவில் இடம்பெற்ற மக்கள் போராட்டத்தை அறிக்கையிடச் சென்ற ஊடகவியலாளர் கணபதிப்பிள்ளை குமணன் என்பவரைக் கடற்படை அதிகாரிகள் இடையூறு விளைவித்தமை.**

தமிழ் மக்களுக்குச் சொந்தமான 250 ஹெக்டேயர் காணியை அபகரிக்கும் முயற்சிக்கு எதிராக ஜூன் 7ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட வட்டுவாகல் பிரதேசவாசிகள் போராட்டம் நடத்தியதைத் அறிக்கையிட்டுக்கொண்டிருந்த போதே, அதனைத் தடுக்கும் வகையில் கடற்படையினர் இவ்வாறு இடையூறு மேற்கொண்டுள்ளனர். கடற்படை அதிகாரி ஒருவர் தனது ஊடக அடையாள அட்டையை எவ்வித அதிகாரமுமின்றி பெற்றுக்கொள்ள மேற்கொண்ட முயற்சிக்கு ஊடகவியலாளர் தனது கடும் எதிர்ப்பை தெரிவித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஆதாரம்: https://twitter.com/JDSLanka

4. **மல்லாவி பிரதேசத்தில் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில் செய்தி அறிக்கையிட்டுக்கொண்டிருந்த ஊடகவியலாளர் சண்முகம் தவசீலன் இனம்தெரியாத சில நபர்களால் தாக்கப்பட்டமை.**

ஜூன் 17ஆம் திகதி ஊடகவியலாளர் சண்முகம் தவசீலனை இராணுவம் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் முன்னிலையில் தாக்கிய இனந்தெரியாத நபர் 2 நாட்களின் பின்னர் கைது செய்யப்பட்டு பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

ஆதாரம்: www.tamilguardian.com

5. **ஊடகவியலாளர் தரிந்து உடுவரகெதர விமானப்படை புலனாய்வு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் குற்றவியல் விசாரணைத் திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டமை.**

10 மாதங்களுக்கு முன்பு (செப்டம்பர் 6, 2021) மேற்கொள்ளப்பட்ட புகார் தொடர்பாக இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது, அதற்கான காரணம் முன்கூட்டியே தெரிவிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஜூன் 28 ஆம் திகதி அன்று, ஊடகவியலாளர்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் இந்த அழைப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து கொழும்பு இரகசிய பொலிஸ் தலைமையகத்திற்கு முன்பாக

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன், 27 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபைக்கு மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

ஆதாரம்: FMM Media Rights Monitoring Desk

6. **காலி கோட்டை உயர் சுவரில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தை இராணுவத்தினர் இடைமறித்தமை.**

இலங்கை மற்றும் அவுஸ்திரேலியா அணிகளுக்கிடையில் ஜூன் 30ஆம் திகதி நடைபெற்ற கிரிக்கட் போட்டியின்போது சட்டத்தரணிகள் உள்ளிட்ட சிவில் செயற்பாட்டாளர்கள் நடத்திய அமைதியான போராட்டத்தை இராணுவ அதிகாரிகள் போராட்டக்காரர்களிடம் இருந்த "Go Home Gota" மற்றும் அரசாங்கத்திற்கு எதிரான வாசகங்கள் அடங்கிய பதாகைகளை பலவந்தமாகப் பறிமுதல்செய்து அதனை அகற்றினர். இந்தச் சம்பவம் வெளிநாட்டு தூதரக அதிகாரிகளாலும் விமர்சிக்கப்பட்டது.

ஆதாரம்: www.youtube.com

7. **சிவில் பிரஜைகள் போராட்ட இயக்கத்தின் இணை அழைப்பாளர் ரவீந்திர ஜாகொடவை பொத்தல காவல் நிலையத்திற்கு அழைத்து வாக்குமூலம் பெற்றுக்கொள்ளப்பட்டமை.**

உள்ளூர் அரசியல்வாதி ஒருவரின் வீட்டைத் தாக்குவதற்கு மக்களைத் தூண்டிய குற்றச்சாட்டின் பேரில் இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும், அது தொடர்பான குற்றச்சாட்டுகள் வன்மையாக மறுக்கப்படுவதாகவும் அவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி அஜித்குமார தெரிவித்துள்ளார்.

ஆதாரம்: www.youtube.com

## சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுபாடுகள்

**ஜூன் மாதத்தில், ஊடக சுதந்திரம் தொடர்பான சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுபாடுகள் என்ற ஆக்கக் கூறுக்குள் உள்ளடங்கும் 20 சம்பவங்கள் அவதானிக்கப்பட்டன. அவற்றில் பெரும்பாலானவை ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் இராஜினாமா செய்ய நிர்பந்தித்த போராட்டங்கள் தொடர்பான சம்பவங்களாகும். கடந்த ஜூன் 9ஆம் திகதி நடந்த வன்முறையில் குற்றம் சாட்டப்பட்டவர்களாகப் பெயரிட்டு அமைதிப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களைக் காவல்துறை ஒடுக்க முயல்கிறது என்பது அவதானிக்கப்பட்ட சம்பவங்களிலிருந்து தெளிவாகிறது.**

**அட்டவணை 03 – 2022 ஜூன் : சட்ட விதிமுறைகள் அல்லது சட்டரீதியான கட்டுபாடுகள்– 20 சம்பவங்கள்**

| குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| சட்ட நடவடிக்கை மேற்கொள்ளல் | 19 |
| ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்கு தண்டனை விலக்கு | 01 |
| **மொத்தம்** | **20** |

1. **கோத்தகோகம போராட்டக்காரர்களை வெளியேற்றுவதை தடுக்கக் கோரிய மனு நிராகரிக்கப்பட்டமை.**

ஜூன் 2 ஆம் திகதி, “கோத்தாகோகம“ போராட்டக்காரர்களை அந்த இடத்திலிருந்து வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்வதனை தடை விதிக்கக் கோரி கட்டட பொறியியலாளர் முஹம்மத் ஹுஷ்லி ஹமீன் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனுவை விசாரிக்க உச்ச நீதிமன்றம் மறுத்துவிட்டது. “கோத்தாகோகம“ போராட்டம் 50 நாட்களாக நடைபெற்று வருவதாகவும், அமைதியான போராட்டம் என்பதால், எந்த விதமான அரச படையாலும் ஒடுக்கப்படவில்லை என்றும் சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஷமிந்திர விக்ரம தெரிவித்தார்.

ஆதாரம்: www.a5news.lk

2. **ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களை மீண்டும் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமை.**

சாட்சிகள்மீது செல்வாக்கு செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் மேற்படி வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட கிரித்தலே இராணுவ முகாமின் முன்னாள் தளபதி ஷம்மி குமாரரத்ன உட்பட இராணுவ புலனாய்வு பிரிவைச் சேர்ந்த 9 பேரின் பிணையை இரத்துச் செய்து விளக்கமறியலில் வைக்குமாறு விசேட மூவரடங்கிய உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மேலும் வழக்கு ஜூலை 27-ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

3. **வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொட, சர்வதேச**

**ஊடகவியலாளர் சம்மேளனத்தின் 31ஆவது மாநாட்டில் உரையாற்றியமை.**

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட சந்தியா எக்னலிகொட தனது அனுபவத்தின் அடிப்படையில் இலங்கையில் ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்குத் தண்டனையிலிருந்து விலக்கு என்ற தலைப்பில் விரிவுரை ஆற்றியது மாநாட்டின் விசேட கவனத்தை ஈர்த்தது.

156 நாடுகளைச் சேர்ந்த 400 பிரதிநிதிகள் பங்கேற்ற இந்த மாநாடு ஓமானின் மஸ்கட்டில் மே 31 முதல் ஜூன் 3, 2022 வரை நடைபெற்றது. இந்த நிகழ்வில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி, சுதந்திர ஊடக இயக்கத்தின் அழைப்பாளர் லசந்த சில்வா, இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர் சங்கத்தின் தலைவர் துமிந்த சம்பத், ஊடகத்துறை ஊழியர் தொழிற்சங்க சம்மேளனத்தின் செயலாளர் தர்மசிறி லங்காபேலி ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஆதாரம்: FMM Media Rights Monitoring Desk

4. **அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் பேரணிக்கு எதிராகத் தடை உத்தரவு பிறப்பிக்க நீதிமன்றம் மறுத்தமை.**

ஆர்ப்பாட்டக்காரர்கள் பல வீதிகளில் பிரவேசிப்பதைத் தடுக்க உத்தரவு பிறப்பிக்குமாறு கறுவாத்தோட்டம் பொலிஸார் ஜூன் 2ஆம் திகதி விடுத்த கோரிக்கையை நிராகரித்த கொழும்பு பிரதான நீதவான் நந்தன அமரசிங்க, அரசியலமைப்பின் 14ஆவது சரத்தின் கீழ் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தை நடத்துவதற்கு உரிமை காணப்படுவதாகச் சுட்டிக்காட்டினார்.

ஆதாரம்: runews.lk

5. **கோத்தகோகம ஆர்ப்பாட்டத்தின் மீதான தாக்குதல் தொடர்பில் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு மனித உரிமைகள் ஆணைக்குழு விடுத்திருந்த அழைப்பு இரத்து செய்யப்பட்டமை.**

முன்னாள் பிரதமருக்கு ஜூன் 1ஆம் திகதி மனித உரிமைகள் ஆணைக்குழுவில் ஆஜராகுமாறு முன்னர் அறிவிக்கப்பட்டிருந்ததுடன், சம்பவம் தொடர்பில் பொலிஸ் அதிகாரிகள் மற்றும் பாதிக்கப்பட்ட தரப்பினரின் வாக்குமூலங்கள் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கை நிறைவடையாத காரணத்தால், குறித்த அழைப்புஒத்திவைக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஆதாரம்: www.newsfirst.lk

6. **கோத்தாகோகம போராட்ட களத்தில் நடத்தப்பட்ட தாக்குதலுக்குக் காரணமான அரசியல்வாதிகளிடம் இருந்து நஷ்டஈடு வழங்குமாறு கோரி உச்ச நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனுமீதான விசாரணை ஆரம்பிக்கப்பட்டமை.**

மேற்கண்ட தாக்குதல் காரணமாகப் பிரஜைகளின் அடிப்படை உரிமை மீறப்பட்டமை தொடர்பில் ஒரு பிரதிவாதி 500 மில்லியன் ரூபா தனது சொந்த பணத்தில் இழப்பீடு வழங்க உத்தரவிடுமாறு கோரி தாக்கல் செய்யப்பட இந்த வழக்கு (SCFR/168/2022) ஜூன் 01 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சட்டத்தரணி நாகாநந்த கொடிதுவக்கு இந்த வழக்கைத் தொடுத்துள்ளார்.

ஆதாரம்: FMM Media Rights Monitoring Desk

7. **மக்கள் போராட்டத்தின் செயற்பாட்டாளர்கள் கைது செய்யப்பட்டமை தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டமை.**

இளம் ஊடகவியலாளர்கள் சங்கம் மற்றும் இளம் சட்டத்தரணிகள் சங்கம் ஆகியன இந்த முறைப்பாட்டை மேற்கொண்டுள்ளன. “கோத்தாகோகம“ தாக்குதலின் பின்னர், நாடு முழுவதும் வன்முறையில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டு 2000க்கும் மேற்பட்டோர்கைதுசெய்யப்பட்டிருப்பதாகவும்அரசஅடக்குமுறையில் ஒரு கருவியாக இந்தக் கைதுகள் நடைமுறைப்படுத்தப்படுவதால், நாட்டில் ஜனநாயகம் மற்றும் அடிப்படை மனித உரிமைகள் பாரிய பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்துள்ளதாக இங்குச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆதாரம்: FMM Media Rights Monitoring Desk

8. **சமூக ஊடக செயற்பாட்டாளர் சம்பத் எதிரிசிங்க கந்தளாய் பொலிஸ ரால் கைது செய்யப்பட்டமை.**

ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கபில அத்துகோரலவின் வீட்டுக்கு முன்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் காணொளியைச் சமூக ஊடகங்கள் மூலமாக விநியோகித்த குற்றச்சாட்டின் பேரில் சமூக ஊடக செயற்பாட்டாளரும் Mother Trinco முகநூல் பக்கத்தின் நிர்வாகியுமான சம்பத் எதிரிசிங்க கந்தளாய் தலைமையக பொலிஸாரால் ஜூன் 6 ஆம் திகதி கைது செய்யப்பட்டார். கடந்த ஜூன் மாதம் 7ஆம் திகதி கந்தளாய் நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட அவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

ஆதாரம்: https://twitter.com/JDSLanka

9. **குருநாகலை சேர்ந்த சமூக ஆர்வலர்கள் இருவரிடம் விசாரணை மேற்கொண்டுதுடன் அதில் ஒருவரை கைது செய்தமை.**

குருநாகல் “கோத்தாகோகம“ போராட்ட இயக்கத்துடன் தொடர்புடைய இரு செயற்பாட்டாளர்களான அதீப ஏகநாயக மற்றும் பிரின்ஸ் ஜெயசூரிய ஆகியோர் ஜூன் 07 ஆம் திகதி குருநாகல் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்திற்கு வரவழைக்கப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதுடன், அதீப ஏகநாயகவை கைது செய்து குருநாகல் மாஜிஸ்திரேட் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியதை அடுத்து பிணையில் விடுவிக்கப்பட்டார்

ஆதாரம்: FMM Media Rights Monitoring Desk

10. **மாத்தறை நீதவான் நீதிமன்றம் போராட்டக்காரர் ஒருவருக்கு மூன்றரை வருட கால சிறைத்தண்டனை விதித்தமை.**

எரிபொருள் தட்டுப்பாட்டுக்கு எதிராக மாத்தறையில் கடந்த ஏப்ரல் 19ஆம் திகதி நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது வீதியை மறித்து “சொத்துக்களைச் சேதப்படுத்திய“ குற்றச்சாட்டின் பேரில் மாத்தறை மெத்தவத்தையைச் சேர்ந்த ஈ.டி. நிரஞ்சன் லக்ஷான் (வயது 30) என்பவருக்கு மூன்றரை வருட கடூழிய சிறைத்தண்டனையும் 56,000 ரூபா அபராதமும் விதித்து மாத்தறை நீதவான் திங்கட்கிழமை (6) அன்று தீர்ப்பளித்தார்.

ஆதாரம்: www.newswire.lk

**11. போராட்டத்தில் ஈடுபட்ட தொழிற்சங்க செயற்பாட்டாளர்கள் சிலரை நீதிமன்ற விசாரணைக்காக அழைத்தமை.**

மே 09 ஆம் திகதி தாக்குதல் தொடர்பாகச் சட்டத்தை அமுல்படுத்த தவறியமைக்கு எதிராக மே மாதம் 25 ஆம் திகதி நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது பொலிஸாரின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டின் பேரில் தொழிற்சங்க செயற்பாட்டாளர்கள் உட்பட மக்கள் போராட்டத்தின் செயற்பாட்டாளர்கள் 5 பேரை ஜூன் மாதம் 13 ஆம் திகதி கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு தெரிவித்து ஜூன் 7 ஆம் திகதி அழைப்பாணை கையளிக்கப்பட்டது. இதற்கு, தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புகள் மத்தியில் கடும் எதிர்ப்புகள் கிளம்பியது.

ஆதாரம்: FMM Media Rights Monitoring Desk

**12. காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் காயமடைந்த பீ.எஸ் அனுரங்க மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடொன்றை சமர்பித்தமை.**

தாக்குதல் நடந்து ஒரு மாதமாகியும், அதில் பாதிக்கப்பட்ட தாம் உட்பட 30க்கும் மேற்பட்டோருக்கு நீதி கிடைக்கவில்லை என்றும், அதற்குக் காரணமானவர்கள்மீது சட்டத்தை அமுல்படுத்த காவல்துறை தவறிவிட்டது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

ஆதாரம்: www.facebook.com

**13. சமூக ஊடக செயற்பாட்டாளர் அனுருத்த பண்டார காலிமுகத்திடல் போராட்டக்களத்தில் கைது செய்யப்பட்டமை.**

மக்கள் மத்தியில் அமைதியின்மையை ஏற்படுத்தும் வகையில் சமூக ஊடகங்களில் கருத்துக்களை வெளியிட்ட குற்றச்சாட்டின் பேரில் கடந்த ஜூன் மாதம் 20ஆம் திகதி கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட சமூக ஊடக ஆர்வலர் அனுருத்த பண்டாரவை விடுதலை செய்ய நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அவர் சார்பில் ஆஜரான ஜனாதிபதியின் சட்டத்தரணி சாலிய பீரிஸ், சந்தேகநபருக்கு எதிரான குற்றச்சாட்டை நீடிக்க முடியாது எனச் சுட்டிக்காட்டினார்.

ஆதாரம்: http://www.adaderana.lk
https://www.facebook.com

**14. மக்கள் போராட்டத்தின் செயற்பாட்டாளரான அமல் சாலிந்த கைது செய்யப்பட்டமை.**

ஜூன் 20 ஆம் திகதி, அவர் கைது செய்யப்பட்டு, துறைமுக காவல்துறையில் தடுத்து வைக்கப்பட்டதுடன் கோட்டை மாஜிஸ்திரேட்டிடம் ஆஜர்படுத்தப்பட்டு பின்னர் சிறையில் அடைக்கப்பட்டார். தடுப்புக் காவலில் இருக்கும்போது சட்டத்தரணி ஒருவரின் உதவியைப் பெற்றுக்கொள்ளுமாறு கோரிய போதும் பொலிஸார் அதற்கு அனுமதிக்கவில்லையெனச் சட்டத்தரணிகள் தெரிவிக்கின்றனர்.

ஆதாரம்: www.facebook.com
thesinhalanews.lk

**15. ஜனாதிபதி செயலகத்திற்கு அருகில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 21 போராட்டக்காரர்கள் கைது செய்யப்பட்டமை.**

ஜனாதிபதி செயலக நுழைவாயிலை மறித்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டின் பேரில் கடந்த 20ஆம் திகதி காலைக் கைது செய்யப்பட்ட இந்தக் குழுவினர் பிற்பகல் கோட்டை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் ரூபா தலா 5 லட்சம் பிணையில் விடுவிக்கப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்களில் பிக்கு ஒருவரும் 16 ஆண்களும் 04 பெண்களும் அடங்குவதாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

ஆதாரம்: www.youtube.com
ceylontoday.lk

**16. ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவை கைது செய்வதை தடை விதிக்குமாறு கோரிய மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்துள்ளமை.**

காலிமுகத்திடல் போராட்டத்தின் மீதான தாக்குதல் தொடர்பில் அவர் கைது செய்யப்படுவதைத் தடுக்க உத்தரவிடுமாறு பா.ம.உ. ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் கோரிக்கை மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் ஜூன் 21ஆம் திகதி நிராகரிக்கப்பட்டது.

குறித்த சம்பவம் தொடர்பில் குற்றவியல் விசாரணைத் திணைக்களம் குறித்த பாராளுமன்ற உறுப்பினரைச் சந்தேக நபராகப் பெயரிட்டதுடன், அதன் பிரகாரம் அவரைக் கைது செய்யுமாறு கோட்டை நீதவான் நீதிமன்றம் கடந்த 10ஆம் திகதி பிடியாணை பிறப்பித்தது. அதனைத் தடுக்க உத்தரவிடுமாறு கோரி அவர் மேன்முறையீட்டு நீதிமன்றில் இந்த மனுவைச் சமர்ப்பித்திருந்தார்.

ஆதாரம்: www.newsfirst.lk

**17. கோட்டை நீதவான் பிறப்பித்த உத்தரவின் பிரகாரம் மருதானை காவல் நிலையத்தில் முன்னிலையான மக்கள் போராட்டத்தின் செயற்பாட்டாளர்கள் 7 பேர் நீதிமன்றில் ஆஜர்படுத்தியமை.**

செயற்பாட்டாளர்களான லஹிரு வீரசேகர, ஜகத் மனுவர்ண, ஜெஹான் அப்புஹாமி, ரத்கராவே ஜினரதன தேரர், தம்மிக்க முனசிங்க, எரங்க குணசேகர மற்றும் இரத்திந்து சேனாரத்ன ஆகியோர் ஜூன் 22ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டதுடன் ஜூலை 01ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிடப்பட்டது. கடந்த ஜுன் மாதம் 9 மற்றும் 10 ஆம் திகதிகளில் கோட்டை மற்றும் தலங்கம பிரதேசங்களில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டில் இவர்களுக்கு எதிராகக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

ஆதாரம்: www.lankaweb.lk

**18. நாடாளுமன்றத்தின் அரசாங்க பொறுப்பு முயற்சிகள்பற்றிய குழு (COPE) வின் செயல்பாடுகளைச் அறிக்கையிடுவதற்கு ஊடகங்களுக்கு வாய்ப்பு மறுக்கப்பட்டமை.**

பாராளுமன்றத்தின் கோப் குழுவின் (அரசாங்க பொறுப்பு முயற்சிகள்பற்றிய குழு) விசாரணைக் கூட்டங்களைச் செய்தி சேகரிக்க இனி ஊடகங்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட மாட்டாது என ஜூன் 23 ஆம் திகதி ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரான

பாராளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ பாராளுமன்றத்தில் தெரிவித்தார். இது ஊடகங்களுக்குக் காணப்படும் உரிமையையும், மக்களின் அடிப்படை உரிமையையாகக் காணப்படும் "தகவல் அறியும் உரிமையை" மீறுவதாகவும், பன்முகத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் என்ற நல்லாட்சிக் கோட்பாடுகளை மீறுவதாகவும் உள்ளது என்பதை வலியுறுத்திய சுதந்திர ஊடக இயக்கம், குறித்த தீர்மானத்தை உடனடியாக இடைநிறுத்துமாறு பொறுப்பானவர்களை கேட்டுக்கொள்கின்றது.

ஆதாரம்: www.ada.lk

**19. மக்கள் போராட்டத்தின் செயற்பாட்டாளரான யொஹான் செனவிரத்ன தம்புள்ளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டமை.**

அரசாங்க சொத்துக்களுக்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டின் பேரில் கடந்த ஜூன் மாதம் 27 ஆம் திகதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டதுடன் அவரை விளக்கமறியலில் வைக்குமாறு பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையை மறுத்த தம்புள்ள நீதவான் நீதிமன்றம் அவருக்குப் பிணை வழங்கியது. சட்டத்தரணி நாகாநந்த கொடிதுவக்கு உட்பட சட்டத்தரணிகள் குழு யொஹானின் உரிமைக்காக முன்வந்தனர்.

ஆதாரம்: https://www.youtube.com

**20. அரசாங்கத்திற்கு எதிரான மக்கள் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்த பேராசிரியர் நெதலகமுவே தம்மதின்ன தேரர் கைது செய்யப்பட்டமை.**

மே 9ஆம் திகதி அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் வீட்டின் மீது தாக்குதல் நடத்துவதற்கு மக்களை வழிநடத்தியதாகக் குற்றம் சுமத்தப்பட்டு களனி பல்கலைக்கழகத்தின் நவீன மொழிப் பிரிவின் பேராசிரியர் நெதலகமுவே தம்மதின்ன பிக்கு அவர்களை ஜூன் 27ஆம் திகதி கம்பஹா பொலிஸார் கைது செய்தனர். கம்பஹா பிரதான நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் குறித்த பிக்கு பிணையில் விடுவிக்கப்பட்டார்.

ஆதாரம்: JDS Lanka reports

## கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள்

**'கட்டமைப்புரீதியான விதிமுறைகள்" ஊடக சுதந்திரத்தின் மற்றொரு முக்கிய அங்கமாகும். ஊடக தொகுதியின் முழு கட்டமைப்பிற்கும் மற்றும் ஊடக சுதந்திரம் இயக்கப்படும் ஒட்டுமொத்த சூழலுக்கும் பொருந்தக்கூடிய 06 சாத்தியமான குறிகாட்டிகளை உள்ளடக்கியுள்ளது. அவற்றில் "கண்காணிப்புக் குழுக்களின் ஊடக சுதந்திரத்திற்கான செயல்திறன்சார் ஆதரவு" என்ற குறிகாட்டியின் கீழ் 1 சம்பவம் ஜூன் மாதத்தில் அவதானிக்கப்பட்டது.**

**அட்டவணை 04–2022 ஜூன் கட்டமைப்புரீதியான விதிமுறைகள் – 01 சம்பவம்**

| குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| கண்காணிப்பு குழுக்களின் ஊடக சுதந்திரத்திற்கான ஆதரவு | 01 |
| **மொத்தம்** | **01** |

1. மே 9 தாக்குதல் தொடர்பான விசாரணைகள் குறித்து தமது அதிருப்தியை தெரிவித்து சட்டத்தரணிகள் சங்கம் சட்டமா அதிபருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியமை.

தாக்குதலுக்குத் தலைமை தாங்கியவர்கள் யார், தாக்குதலைத் தடுக்காத உயர் பொலிஸ் அதிகாரிகள் யார் என்பது தெளிவாகத் அடையாளம் காணக்கூடியதாக இருந்தாலும்கூட அவர்களுக்கு எதிராகச் சட்டம் அமுல்படுத்தப்படுவதாகத் தெரியவில்லை என்பதாகவும் மேலும் குற்றவியல் விசாரணைத் திணைக்களம் சட்டமா அதிபரின் அறிவுறுத்தல்களுக்கு அமைய செயற்படவில்லை என்பதாகவும் சட்டத்தரணிகள் சங்கம் தமது கடிதத்தில் சட்டமா அதிபரிற்கு சுட்டிக்காட்டியுள்ளது.

ஆதாரம்: www.youtube.com

## தொழில்சார் நிபுணத்துவம்

**ஊடகவியலாளர்களின் கல்வி மற்றும் பயிற்சி, ஊடகவியலாளர்களின் தொழில்சார் பங்குபற்றிய புரிதல், ஊடகத் தொழிலுக்கான அங்கீகாரம் போன்ற 6 குறிகாட்டிகளை இந்த ஆக்கக்கூறுக்குள் உள்ளடங்குகின்றது. அவற்றில், மேலே குறிப்பிடப்பட்ட முதல் குறிகாட்டியைச் சேர்ந்த ஒரு சம்பவம் ஜூன் மாதத்தில் அறிக்கையிடப்பட்டது.**

**அட்டவணை 05 – 2022 ஜூன் தொழில்சார் நிபுணத்துவம் – 01சம்பவம்**

| குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| ஊடகவியலாளர்கள் சிறந்த அறிவுப் பெற்றவராகவும் பயிற்சி பெற்றவர்களாகவும் காணப்படுதல். | 01 |
| **மொத்தம்** | **01** |

1. **நெருக்கடி தொடர்பான விரிவான கருத்தாடல் என்ற தொனிப்பொருளில் ஹாஷ்டாக் தலைமுறை அமைப்பு இணையவழி கலந்துரையாடல் ஒன்றை ஏற்பாடு செய்தமை.**

அதிகாரிகளைப் பொறுப்புக்கூறும் செயற்பாட்டிற்குள் தொடர்ந்து வைத்திருப்பதில் புலனாய்வு இதழியலின் வகிபாகம் குறித்து இங்குக் கவனம் செலுத்தப்பட்டது. ஜூன் 15 ஆம் திகதி இடம்பெற்ற பிரதான உரையைச் சர்வதேச ஊடகப் பயிற்றுவிப்பாளர் பர்வேஸ் கான் (Pervez Khan) மற்றும் வளவாளர்களான ஷஹீர் அனீஸ், கமந்தி விக்கிரமசிங்க மற்றும் சந்துன் அரோஷ பெர்னாண்டோ ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஆதாரம்: FMM Media Rights Monitoring Desk

**அட்டவணை 6 : ஊடக சுதந்திரம் : 2022 ஜனவரி முதல் ஜூன் வரை சுதந்திர ஊடக இயக்கத்தால் அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை**

| உள்ளடக்கப்பட்டுள்ள குறிகாட்டிகள் | 2022 ஜனவரி–மே | | 2022 ஜூன் |
|---|---|---|---|
| | புதிய சம்பவங்கள் | முன்னைய சம்பவங்களின் வளர்ச்சிப்போக்கு | |
| பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் | 28 | | 07 |
| சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுபாடுகள் | 26 | 11 | 20 |
| ஊடக சுயாதீனத்துவம் | 04 | | - |
| தொழில்சார் நிபுணத்துவம் | 02 | | 01 |
| கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள் | 10 | 01 | 01 |
| **மொத்தம்** | **70** | | **29** |

2022 ஊடக சுதந்திர உரிமைகள் கண்காணிப்பு அறிக்கை ஜனவரி வரை இங்கு பார்வையிடவும்

**பின்னுரை:** சிவில் சமூக குறிக்கோள்கள், தேசிய மற்றும் சர்வதேச வழக்கு தீர்ப்புகள் மற்றும் அனைத்துலக பிரகடனாங்களுக்கு ஏற்ப, ஊடக சுதந்திரம் என்பது மனித உரிமை என சுதந்திர ஊடக இயக்கம் உடன்படுவதுடன். அனைத்து மனிதர்களுக்கும் காணப்படவேண்டிய சிந்தனை சுதந்திரம், மனசாட்சி சுதந்திரம், மதச்சுதந்திரம் மற்றும் மற்றவர்களின் கருத்துக்களை தெரிந்து கொள்வதற்கான அடிப்படை உரிமைகளை தடையேதும் இன்றி அனுபவிப்பதற்கான சுதந்திரமே மனித உரிமையாகும். இந்த அடிப்படையில் ஊடக சுதந்திரம் என்பது பின்வரும் பத்து பகுதிகளை உள்ளடக்கிய தொகுப்பு என சுதந்திர ஊடக இயக்கம் கருதுகின்றது.

(1) சிந்தனை சுதந்திரம் (2) கருத்து தரிப்பதற்கான சுதந்திரம் (3) கருத்து வெளிப்படுத்தும் சுதந்திரம் (4) அமைதியான முறையில் மேற்கொள்ளப்படும் ஒன்றுகூடல் உரிமை மற்றும் கருத்து தெரிவிக்கும் சுதந்திரம் (5) தகவல் அறியும் உரிமை (6) கேட்டல் மற்றும் பார்த்தல் வழி சார்ந்த பதிவு செய்தல் மற்றும் அறிக்கை வைத்துக்கொள்வதற்கான சுதந்திரம் (7) பதிப்புச்சுதந்திரம் (8) செய்திப்பத்திரிகை சுதந்திரம் (9) இலத்திரனியல் ஊடக சுதந்திரம் (10) இணைய சுதந்திரம். என்பனவையே இதன் பகுதிகூறுகள் ஆகும்.

இந்த ஒவ்வொரு பகுதிகளும் ஒன்றோடொன்று தொடர்பு உடையதாக காணப்படுவதனால் ஒரு பகுதிகூறுக்கு ஏற்படும் வரையறைகள் மற்றும் தாக்கங்கள் ஊடக சுதந்திரம் தொடர்பில் காணப்படும் அனைத்து பகுதிக்கூறுக்கும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை சுதந்திர ஊடக இயக்கம் ஏற்றுக்கொள்கின்றது. எனவே பொறுப்பற்று மற்றும் வெறுப்புணர்வுடன் மேலே குறிப்பிட்ட சுதந்திரங்களை அத்துமீறி அனுபவிப்பதானது சிறந்ததொரு முறையல்ல என்பதனை சுதந்திர ஊடக இயக்கம் கருதுகின்றது.

இந்த மாதாந்த அறிக்கை தயாரிக்கபடுவது பொது ஊடகத்தில் பிரசுரிக்கப்படும் மற்றும் சுதந்திர ஊடக இயக்கத்திற்கு கிடைக்கப்பெறும் தவல்களுக்கு அமைய மேலதிக தகவல்களை தேடி அறிந்து அந்த நிகழ்வுகளை ஆய்வுக்குட்படுத்திய பின்னரேயாகும். இந்த ஆய்வின் போது சுதந்திர ஊடக இயக்கம் மேலே குறிப்பிட்ட பத்து ஊடக சுதந்திர சுட்டெண் பகுதிகளை உள்ளடக்கிய சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏழு தொகுப்புகளின் ஊடாக தேர்ந்தெடுக்கப்பட்ட அடிப்படை அளவுகோல்களை கொண்டே கண்காணிப்பு நடவடிக்கையை மேற்கொள்கின்றது.


Free Media Movement

Convener: Lasantha De Silva +94 71 166 7938, +94 77 810 7620 | Secretary: Hana Ibrahim +94 77 741 2995
Treasurer: Ananda Jayasekara +94 77 312 4850
No 96, Bernard Soysa Mw, Colombo 05. Tel: +94 112368895 Fax: +94 112368895;
Web: www.fmmsrilanka.lk, www.mediareform.lk
Email: fmmsrilanka@gmail.com|Facebook: https://www.facebook.com/fmm.srilanka
Twitter: https://twitter.com/FMMsrilanka|#FMM25